**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**C.C. 356 /2022**

**Prosecution Witness : 5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. முத்தையா** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. ராமசாமி** | **Calling** | : | |
| **Village** | : | **செம்பட்டி** | **Religion** | : | **இந்து** |
| **Taluk** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **51** |
| | | | **Dated** | : | **04.11.2024** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**பட்டியல் சாட்சி 6 திரு. முத்தையா ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அ.சா. 5 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து டீக்கடை வைத்து நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரி பெயர் தெரியாது. அவர் என் பக்கத்து ஊரை சேர்ந்தவர். அசா.1 ஐ தெரியாது. என் கடைக்கு பக்கத்தில் ஒருவருக்கொருவர் சண்டை போட்டு கொண்டார்கள். அப்போது நான் என் கடையில் இருந்து சாப்பிடுவதற்காக என் வீட்டிற்கு சென்று விட்டேன். நான் 4 மணிக்கு மேல் கடைக்கு வந்தேன். சண்டை நடந்ததாக தெரிந்து கொண்டேன். போலீஸ் என் கடை ஓனர் யார் என கேட்டு எழுதிக் கொண்டு சென்றதாக தற்போது போலீசார் அழைப்பாணை அனுப்பிய போது தான் தெரியும்.

**கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சி பிறழ் சாட்சியாக மாறிவிட்டதால் அரசு தரப்பில் அவரை குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதி கேட்டதன் பேரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

பழைய செம்பட்டிக்கும், திருமைய கவுண்டன் பட்டிக்கும் இடையே சுமார் 2 கி.மீ. தூரம் இருக்கும். திருமைய கவுண்டன் பட்டியில் இருப்பவர்கள் மளிகை சமான் வாங்க செம்பட்டிக்கு தான் வருவார்கள். திருமைய கவுண்டன் பட்டியை சார்ந்த பால் பாண்டியும், ஆஜர் எதிரி நாகராஜிடமும், அசா.1 கண்மணி என்பவரும் பணம் வாங்கிய விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கடந்த 11.11.2013 ம் தேதி மதியம் சுமார் 02.00 மணி அளவில் எனது டீக்கடைக்கு அருகில் இருக்கும் ஓட்டலுக்கு சாப்பிடுவதற்காக வந்த முருகன் என்பவரிடம் ஆஜர் எதிரி நாகராஜ் பணம் கொடுக்கல் வாங்கல் முன் விரோதம் காரணமாக தகராறு செய்து, முருகனை பார்த்து தாயோழி மகனே பணம் வாங்கிட்டு தரமாட்டியா, பணத்தை கேட்டால் எதிர்த்து பேசுவியடா என்று முதுகு, கன்னம் ஆகிய இடங்களில் மாறி மாறி அடித்ததாகவும், முருகனை பார்த்து வாங்கிய கடனை கொடுக்கவில்லை என்றால் உன்னை கொல்லாமல் விட மாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்ததாகவும், நான் இந்த சம்பவத்தை நேரில் பார்த்ததாக சொல்லிவிட்டு தற்போது உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

R KANAGARAJ

Digitally signed by R KANAGARAJ
Date: 2024.11.04 16:01:12 +0530